பட்டுக்கோட்டையல் துணை நீதிமன்றம்.

*வினா எண். 129—திரு. மு. அம்பிகாபதி, திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூரில் இயங்கிவரும் சப்-கோர்ட்டை பட்டுக்கோட்டைக்கு மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், மன்னார்குடியில் இயங்கிவரும் குற்ற இயல் துணை நீதிமன்றத்தையும் பட்டுக்கோட்டைக்கு மாற்றம் செய்வதற்கான காரணங்கள் யாவை ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தஞ்சாவூரில் இயங்கி வருகின்ற நீதிமன்றத்தை பட்டுக்கோட்டைக்கு மாற்றுவதாக உத்தேசம் இல்லை. ஆனால பட்டுக்கோட்டையிலேயே தனியாக ஒரு துணை நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இயங்கி வருகின்றது.

வாணியம்பாடியினை தனி ஊராட்சி ஒன்றியமாக்கல்.

*வினா எண். 130—திரு. இ. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பத்தூர், பேரணாம்பட்டு, நாட்ராம்பள்ளி ஒன்றியங்களை மாற்றியமைப்பதன் மூலம் வாணியம்பாடியினை புது ஊராட்சி ஒன்றியமாக மாற்றும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

(ஆ) இது குறித்து ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள் சம்பந்தமான பிரிவினை எவ்வளவு காலத்திற்குள் நடக்கும். ஏனென்றால் இந்தப் பிரிவினை என்று வருகிறபோது அடுத்து வரக்கூடிய தேர்தல் காலத்தில் நடக்காமல் போகும். அப்படியானால் தேர்தல் எப்போது? இன்னும் வேறு சீர்திருத்தங்களை யெல்லாம் செய்வதாகச் சொல்கிறார்கள். பெண்களுக்கென்று, அரிசனங்களுக்கென்று, அதெல்லாம் முடிய காலதாமத ஆகுமா? என்றைய தினத்திற்குள் என்பதெற்கென ஒரு கால வரையறை உண்டா? இதற்கெல்லாம் அமைச்சரவர்கள் விளக்கம் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.